REPORTING SE
(Council)

1984 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(இ) ரூ. 32.51 கோடி செலவில் உலக வங்கியின் கடனுதவியுடன் மதுரை மாநகருக்குத் தேவையான குடிநீரை வைகை நதியிலிருந்து கொண்டு வரும் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிறைவேற்றப் பட இருக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பிறகே 1984-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தொடங்கப்பெற்று சுமார் நாலரை ஆண்டுகளில் முடிக்கப்படும்.

வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களைத் திறத்தல்.

17. **வினா**—திரு. ஈ. எஸ். வெங்கடேசன் (திரு. ஏ. ஜே. தாஸ் சார்பில்) மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வெளிநாடுகளில் கோ-ஆப்டெக்ஸ் (Co-optex) விற்பனை நிலையங்களை திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை. ஏற்கெனவே சிங்கப்பூரில் ஒரு விற்பனை நிலையம் கோ-ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல் மூலம் ஏற்பட்டு, இயங்கி வருகிறது. சென்ற ஆண்டு ஏற்றுமதி ஒரு கோடி ரூபாய் வரையில் இருந்தது. இந்த ஆண்டு ஏற்றுமதி சுமார் 1¼ கோடி ரூபாய் இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : அமெரிக்க நாட்டிலும், ஐரோப்பிய நாடு களிலும் கோவாப்டெக்ஸ் துணிகளுக்கு நல்ல கிராக்கி இருப்பதாகச் சொல் கிறார்கள். ஆகவே அந்த நாடுகளிலே விற்பனை நிலையங்களை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : சிங்கப்பூரில் சென்ற ஆண்டு ஒரு கடையை ஏற்படுத்தி இருக்கிறோம். அங்கிருந்து மற்ற நாடுகளுக்கு கைத் தறித் துணிகள் அனுப்பப்பட்டு வருகின்றன. தற்போது வேறு நாடுகளில் விற்பனை நிலையங்கள் ஏற்படுத்துகிற யோசனை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1984 பிப்ரவரி 15

திரு. ஜி. சுவாமிநாதன் : நம் நாட்டிலிருந்து லுங்கிகள் மால்தீவ், மொரீசியஸ், லட்சத்திவு போன்ற இடங்களுக்குத் தனியாரால் அனுப்பப்படுகிறது. மேற்கண்ட நாடுகளில் நம்முடைய கோவாப்டெக்ஸே லுங்கிகள், கைத்தறித் துணிகள் போன்றவைகளை விற்பனை செய்வதற்கு ஆவன செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : ஏற்கெனவே சிங்கப்பூரில் இருக்கிற விற்பனை நிலையத்தின் மூலம் மற்ற நாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறோம். ஒரு கடையை ஏற்படுத்துவதற்கு முன்பு அதற்கு ஆகிற வாடகை, பணியாளர்கள், பணியாளர்களுக்கான சம்பளம் போன்றவற்றை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, அதன் மூலம் மீதம் எவ்வளவு வரும் என்பதையெல்லாம் பார்த்துத்தான் மற்ற இடங்களில் தொடங்க முடியும். அந்தவகையில் முன்மாதிரியாக சிங்கப்பூரில் ஒன்றைத் தொடங்கியிருக்கிறோம். அதைப் பரீட்சார்த்தமாக வைத்து, அதனால் ஏற்படுகிற பலா பலன்களையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து அதற்குப் பிறகு மற்ற இடங்களில் அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

திரு. க. இராமமூர்த்தி : ஏற்கெனவே அரசு எடுத்துள்ள பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக இயங்குகிறது அல்லது செயல்படுகிறது என்று நான் நம்புகிறேன். கோவாப்டெக்ஸ் என்பது இன்றையதினம் அதிக அளவிலே அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிற ஒன்றாக மாறியிருக்கிறது. அதோடு கூட லாபமா அல்லது நஷ்டமா என்று பார்க்காமல், அதிக அளவில் கைத்தறித் துணிகளை வெளிநாடுகளில் விற்பனை செய்ய வேண்டிய கட்டாயம் நமக்கு இருக்கிறது. மேலும் உள்ளூரிலேயே கோவாப்டெக்சை வளர்க்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். ஒரு பக்கம் லாபம் இல்லையென்றாலும் கூட, அதிக நஷ்டம் இல்லாத வகையில் அயல் நாடுகளில் கைத்தறித் துணிகளை அதிக அளவில் விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கையை எடுக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : ஏற்கெனவே நெசவாளர் பெருமக்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளை விற்பனை செய்வதற்கு தமிழ் நாடு மற்றும் இந்திய அளவிலே மற்ற மாநிலங்களிலே 000-க்கு மேற்பட்ட விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. வருகின்ற நடப்பு ஆண்டில் சுமார் 100 விற்பனை நிலையங்கள் இந்தியா முழுவதும் பல்வேறு இடங்களில் திறக்கப்பட இருக்கின்றன. ஆனால் மற்ற நாடுகளில் இந்தக் கடைகளைத் திறப்பது என்றால், பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. அதைத்தான் நான் முதலிலேயே சொன்னேன். இருந்தாலும் இதன் விற்பனையை உயர்த்த வேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம். அதற்கேற்ற வகையில் அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

REPORTING SECTION
(Council)

1984 பிப்ரவரி 15]

டாக்டர் இரா. சனார்த்தனம் : வெளி நாடுகளில் விற்பனை நிலையங்களைத் துவக்குவது என்றால், சிரமங்கள் இருக்கின்றன. ஆனால் அதே நேரத்தில் வெளி நாடுகளில் விற்பனையாளர்களை நியமிக்கலாம் அல்லவா? அதோடு கூட வெளி நாடுகளில் எந்தமாதிரி நிறங்களை விரும்புகிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப துணிகளைத் தயாரித்து விற்பனை செய்வதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மற்ற நாடுகளில் உள்ள மக்கள் எதை எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்வதற்காக முன்னாள் கைத்தறி அமைச்சர், கோவாப்டெக்ஸ் தலைவர், இயக்குநர் மற்றும் தொழில் நுட்ப அதிகாரி இவர்கள் எல்லாம் வெளி நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி, இப்போதே தனியார் மூலமாக, ஏஜென்சி மூலமாக மற்ற நாடுகளுக்கு அனுப்பிக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் அரசின் சார்பில் அவ்வாறு அனுப்புவதில்லை.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை.

*** 18. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் காகிதத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(இ) ஏற்கெனவே சுமார் 200 கோடி ரூபாய் செலவில் புகளூரில் ஆண்டுக்கு 50 ஆயிரம் டன் செய்தித் தாளும், 40 ஆயிரம் டன் காகிதமும் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்று உருவாகியுள்ளது. அந்தத் தொழிற்சாலை இந்த ஆண்டு டிசம்பரில் உற்பத்தியைத் துவங்கும். அது தவிர தற்போது புதிதாக காகித ஆலை ஏற்படுத்துகிற திட்டம் ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.